**செய்தி வெளியீடு எண்: 571** **நாள்: 02.10.2012**

**செய்தி வெளியீடு**

அந்நிய துணி வகைகள் புறக்கணிக்கப்பட வேண்டும்; நம் நாட்டு மக்களால் உருவாக்கப்படும் கதர் துணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என தேசபிதா மகாத்மா காந்தி அவர்களால் உருவாக்கப்பட்ட இயக்கமே கதர் உற்பத்தி இயக்கமாகும். எனவே, மகாத்மா காந்தி அவர்களால் முக்கியத்துவம் அளிக்கப்பட்ட கதர் துணிவகைகள் உற்பத்தி தொழில் நலிவடையாமல் காப்பாற்றப்படுவதற்கும், கதர் துணி வகை உற்பத்தியினை அதிகரிக்கப்பதற்கும் பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

கதர் தொழில் சிறக்க மற்றும் கதர் துணி வகைகளின் விற்பனை அதிகரிக்க, ஆண்டுதோறும் கதர், பருத்தி மற்றும் பாலிவஸ்திரா ரகங்களுக்கு விற்பனை விலையில் தள்ளுபடி வழங்க அரசால் மானியம் வழங்கப்படுகிறது. அதே போல் 2011-12 ஆண்டும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கதர், பருத்தி மற்றும் பாலிவஸ்திரா துணி வகைகளுக்கு விற்பனை விலையில் 30 விழுக்காடும், கதர் பட்டு வகைகளுக்கு 20 விழுக்காடும் தள்ளுபடி வழங்குவதற்கு ஏதுவாக கதர்துறை நிறுவனங்களுக்கு அரசு மானியமாக 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள்.

காதி துணி வகைகளுக்கு அரசால் வழங்கபட்ட தள்ளுபடி மானியத்தினால் நுகர்வோரே அதிகமாக பயன் பெற்று வருகின்றனர். கதர் உற்பத்தியாளர்களான நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களும் பயன்பெறும் வண்ணம், இந்த ஆண்டு முதல் அதாவது 2012-13 ஆம் ஆண்டு முதல், அவர்களுக்கு உற்பத்தியின் அடிப்படையில் 20 விழுக்காடு ஊக்கத் தொகை வழங்கவும், இதில் 5 விழுக்காடு கதர் உற்பத்தியாளர்களான நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு ஊக்கத் தொகையாகவோ அல்லது போனசாகவோ வழங்கப்படுவதற்கும், மீதமுள்ள 15 விழுக்காடு கதர் நிறுவனங்கள் தங்கள் விற்பனையை அதிகரிக்க பயன்படுத்திக் கொள்வதற்கும், அரசு மானியம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 12 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், காதி துணிவகைகளின் உற்பத்தி அதிகரிப்பதுடன், அதன் உற்பத்தியாளர்களான நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள், மற்றும் கதர் உற்பத்தி நிறுவனங்கள்அனைத்தும் பயன்பெறும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 2.10.2012.